Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 14 (27-01-1993) புதன்கிழமை ஓசை 844

## சொந்த மாவட்டங்களுக்கு 101 ஆசிரியர்கள் இடமாற்றம்

சொந்த மாவட்டமல்லாத ஏனைய இடங்களில் பல வருடகாலமாக கடமையாற்றிய வட-கிழக்கைச் சேர்ந்த 101 ஆசிரியர்களுக்கு சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இவ் இடமாற்றத்தின் கீழ் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த 72 ஆசிரியர்கள் யாழ்-மாவட்டம் வந்துள்ளனர். யாழ்-மாவட்டத்தில் கடமையாற்றிய ஏழு பேர் சொந்த இடங்களிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய (6 ஆம் பக்கம் பார்க்க)

### [ பல்கலைக்கழக அனுமதி ]

# வெட்டுப்புள்ளிக்கு எதிரான வழக்கு

# விசாரணை முடிந்தும் தீர்ப்பு இல்லை

## தீர்ப்பு அரசை நெருக்கடியில் தள்ளுமாம்

(யாழ்ப்பாணம்)

1991/92 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதியில் அரசாங்கம் கடைப்பிடித்த வெட்டுப்புள்ளி முறைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் விசாரணைகள் பூர்த்தியாகியுள்ள போதும் தீர்ப்பு வழங்குவது தாமதப்படுத்தப்படுவதாக தெரியவருகின்றது. இவ்வழக்கின் தீர்ப்பு அரசாங்கத்தைப் பெரும் நெருக்கடியில் தள்ளும் என்பதனால், வழக்கு தொடர்ந்தவர்களுடன் சமரசம் செய்து கொள்ள அரசாங்கம் முற்படுவதாகவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியவருகின்றது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கிய வெட்டுப்புள்ளி திட்டத்தை எதிர்த்து மேற்கொண்ட வழக்குத் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ளன. மிகவிரைவில் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஆகஸ்டிலும் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரலிலும் நடைபெற்ற இரு பரீட்சைகளையும் ஒன்றாகக்கருதி வெட்டுப் புள்ளியைத் தீர்மானிக்கும்படி கோரியும் ஏற்கனவே நடைமுறைப்படுத்திய வெட்டுப்புள்ளித் திட்டத்தைக் கண்டித்தும் மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கின் விசாரணைகளின் அடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவையும், அரசையும் நெருக்கடிக்குள் தள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனாலேயே அரசு மேற்படி வழக்குத் தாக்கல் செய்த மாணவனுடன் சமரசம் செய்ய முயற்சித்து வருவதாக கூறப்படுகின்றது இதற்காக சம்பந்தப்பட்ட மாணவனுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேச்சு வார்த்தை நடாத்தியதாககொழும்பில் இருந்து கிடைக்கும் தக (6-ம் பக்கம் பார்க்க)

## ரங்கூனிலிருந்து ஆயுதம் கிட்டு வாங்கிவந்தாராம்

### சிறிலங்கா புலனாய்வுத்துறையின் கண்டுபிடிப்பு

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு ரங்கூனில் இருந்து கப்பலில் ஆயுதங்களை ஏற்றிவந்திருக்கக் கூடும் என சிறிலங்கா புலனாய்வு பிரிவு கண்டுபிடித்திருக்கிறதாம்.

சிங்கப்பூர், தாய்லாந்து அரசுகளின் ஒப்பந்தம் காரணமாக அங்கு விடுதலைப் புலிகள் அமைப்பு செயல்படமுடியாத சூழ்நிலை உருவாகி இருப்பதால் ரங்கூனை தலைமையகமாகவிடுதலைப்புலிகள் மாற்றிருக்கக்கூடும் என சிறிலங்கா புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்புகளிடம் இருந்து விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வாங்கி இருக்கமுடியுமா என்பது பற்றியும் சிறிலங்கா புலனாய்வு பிரிவு விசாரித்து வருகிறதாம்.

சில மாதங்களுக்கு முன்னர் கிட்டு பாகிஸ்தான் சென்று அங்கு ஆயுதம் வாங்கப் பேச்சு வார்த்தை நடாத்தியதாக பாகிஸ்தானிலுள்ள சிறிலங்கா தூதுவர் மூலம் அறிவதாக சிறிலங்கா புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

### இந்திய சதியைக் கண்டித்து நடைபெறும்

## கண்டனப் பேரணியில் கலந்துகொள்ள அழைப்பு

மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகளை மரணப் பொறிக்குள் சிக்கவைத்து அவர்கள் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ளச் செய்வதற்குப் பொறுப்பாக இருந்த இந்திய அரசைக் கண்டித்து இன்று தமிழீழக் கலை இலக்கியப் பத்திரிகையாளர்கள், அமைப்புகள் ஒன்றிணைந்து கண்டனப் பேரணியையும் அஞ்சலிக் கூட்டத்தையும் நடாத்தவுள்ளன.

பிற்பகல் 2 00 மணிக்கு நாச்சிமார் கோவிலிலிருந்து ஆரம்பமாகும் கண்டனப் பேரணியிலும், மாலை 3 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் அஞ்சலிக் கூட்டத்திலும் அனைத்துக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், மற்றும் மத, சமூக, மேம்பாட்டு நிறுவன உறுப்பினர்கள் விடுதலை விரும்பிகள் அனைவரையும் கலந்து கொண்டு தமது உணர்வுகளை உலகுக்குத் தெரியப் படுத்த வேண்டும் என விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## குண்டுவீச்சு விமானங்கள் பலாலி வந்து இறங்கின

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் நேற்று மாலை 5-30 மணியளவில் தென்பகுதியில் இருந்து நோட்டமிட்டவாறு பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கியதாக தெரிய வருகின்றது.

இதேவேளை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள் மற்றும் உலங்குவானூர்திகள் நேற்றும் நேற்று முன்தினமும் வலிகாமம் மற்றும் தென்மராட்சி ஆகிய பகுதிகளை அடிக்கடி நோட்டமிட்டவாறு திரிந்ததை அவதானிக்க முடிந்தது.

[பா], [மு]

### யாழ் போதனா வைத்தியசாலை

## மருந்துப் பொருள்கள் குமணவில் எடுத்துவரப்படும்

யாழ். போதனா மருத்துவமனைக்குரிய இவ்வாண்டின் முதலாவது காலாண்டுக்குரிய மருந்துப் பொருள்கள் 'குமண' என்ற கப்பலில் ஏற்றப்பட்டு வருகிறது.

மேற்படி மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது. எனினும் சில மருந்துப் பொருள்கள் குறைந்த அளவிலேயே எடுத்துவரப்படவிருக்கிறது. மேற்படி கப்பல் மிகவிரைவில் மருத்துறையை வந்தடையும்.

## திருமலைப் படகு விபத்து பலியானோர் 42 ஆக உயர்வு

(திருக்கோணமலை)

திருக்கோணமலைக் கடற் பிராந்தியத்தில்பயணிகளுடன் மூழ்கிய படகில் இறந்தவர்களின் தொகை 42 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பொதுமக்கள் ஒன்பது பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இப்படகில் பயணம்செய்தவர்களின் தொகை சரிவரத் தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் சிக்கியவர்களின் பெயர் விபரங்களை அறிவதற்கு உறவினர்களின் உதவி கோரப்பட்டுள்ளது. இவ்விபத்தில் சிக்கியவர்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பலதரத்தினரும் அடங்குகின்றனர். இறந்தவர்களில் இருவர் குழந்தைகள் என்றும், ( 6ஆம் பக்கம் பார்க்க )

## தபால்பொதிகள் வரும்

[வடமராட்சி]

பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவுள்ள 'குமண' கப்பலில் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு ஒரு தொகுதி தளபாடங்களையும், மற்றும் யாழ் மாவட்டத்திற்கான தபால் பொதிகளையும் எடுத்து வரும்.

இக்கப்பல் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வந்துசேரும்.

[யோ]

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை பிற்பகல் 3. 00 மணி முதல் 3. 30 மணிவரைநல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்புநிதி சேகரிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் தமது மீட்புநிதிக்கடனைச் செலுத்தலாம் என மீட்புநிதிப்பொறுப்பாளர் செ. வெற்றிஅரசன் தெரிவித்துள்ளார்.

## அதிபர் நியமனம் விபரங்கள் வெளிவந்தன

1991 இல் நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை I. II போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 1-6 91 முதல் நியமனம் செய்யப்பட்ட அதிபர்களின் பெயர்ப்பட்டியல் இலங்கை கல்விச்சேவை ஆணைக்குழுவினால் யாழ் கல்வித்திணைக்களத்துக்கு கிடைத்துள்ளது.

அதிபர் தரம் I -ல் 21 பேரும் அதிபர் தரம் II - ல் 34 பேரும் யாழ். மாவட்டத்திலிருந்து இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

நியமனம் பெற்றோர் பெயர் விபரங்கள் உள்ளே பிரசுரிக்கப் பட்டுள்ளன. (17)

## ஏழாலையில் எறிகணை மூவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

பலாலி சிறிலங்காஇராணுவ முகாமில் இருந்து ஏழாலை, கட்டுவன், குரும்பசிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது நடாத்தப்பட்ட எறிகணைத் ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### கலண்டர்கள் விற்பனைக்கு

அழகிய படத்துடனான மினி கலண்டர்கள் தொகையாக கொள்வனவு செய்பவர்களுக்கு ரூ 6/-க்கு விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தக சாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4017)

### டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு). தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும் DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5795)

### எம் ஜி. ஆர் திருமணசேவை

பொருத்தமான மணமகன் மணமகள் தேடுபவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் வே. புண்ணியமூர்த்தி அனுமதி இலக்கம் 2518 புத்தூர் சந்தி, மீசாலை. (3373)

### *ENGLISH*

Spoken, Grammar and Literature ஒருங்கமைந்த 3 மாதப் பயிற்சி. கிழமையில் 2 நாட்கள். ஆரம்பம்:- 27-1-93 பி. ப. 5 மணி V. N Kandasamy A. I.B. Part I (London) Inter London) 87. திருநெல்வேலி றோட் (றயில் கடவைக்கு அண்மையில்), கொக்குவில். (4158)

### வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5853)

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகும். க.பொ.த (சா.த) கடைசித் தகைமை ஆகும். நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலராசிரியர் சங்கம், மே/பா உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [4157]

### அனுமதி இல்லை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள எழுதுவினைஞர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கு அனுமதி அட்டைகள் இன்றி பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என யாழ் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

### புதிய உயர் கல்லூரி

(NEW COLLEGE OF HIGH STUDIES)

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.

A/L 92 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

**மீட்டல் வகுப்புக்கள்**

ஆரம்பம்

**28-01-93**

(வியாழன்)

- பொருளியல் — குமாரவேலு
- கணக்கியல் — SAM
- வர்த்தகம் — பசில்
- அளவையியல் — சோதி
- அரசியல் — கியூபேட்
- புவியியல் — சண்
- வரலாறு — நாகராணி
- தமிழ் — குழந்தை
- இந்து நாகரிகம் இந்து சமயம் — அருள்நங்கை

(சி-5877)

### புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பிதழ்

உ

அன்புடையீர்!

நிகழும் ஆங்கீரச வருடம் தை மாதம் 14-ம் நாள் (27-01-1993) புதன்கிழமை காலை 9-45 மணிதொடக்கம் 11-00 மணியளவில் வரும் சுபவேளையில்,

**த வீடியோ எக்கனோமி அன்ட் (F) பான்சி ஸ்பொட்**

**THE V. D. O. ECONOMY & FANCY SPOT**

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்தத் திருவருள்கூட்டி உள்ளமையால், அவ்வமயம் தாங்களும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

302, பலாலி வீதி,
ஆலடிச்சந்தி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
ஆறுமுகம் ரமேஷ்

(சி-5885)

### றேடியன்ற் கல்வி நிலையம்

புங்கன்குளம் - அரியாலை

எமது மணியான மாணவரை பெருமகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம்.

- L. சேகரன் - 4A - பொறியியல்
  எமது நிறுவன நிழல்கள் பொறுப்பாளர்
- K. கிருஸ்ணகுமார் - 4A - வர்த்தகம்
  எமது நிறுவன கலை கலாசார பொறுப்பாளர்
  90 ஆம் ஆண்டு அதிசிறந்த மாணவன்
- K. கேந்திரன் - 4A - வர்த்தகம்
  சகலதுறை மாணவன்

சிறந்த பெறுபேறு பெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டுகின்றோம்.

94 கணக்கியல்
திரு. தனபாலசிங்கம்
ஆரம்பம்: 28.1.93
மாலை 4 மணி

ஆண்டு **5** ஆரம்பமாகியுள்ளது

(4155)

### அனைத்துத் தமிழீழ மக்களுக்கும் நன்றிகள்

**லெப். கேணல் குட்டிசிறி**

**(இராசையா சிறிகணேசன்)**

வங்கக் கடலிலே காவியம் படைத்த எங்கள் செல்வத்தின் நிகழ்வில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், இயக்கப் போராளிகள் மற்றும் யாவருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

டாக்டர் இராசையாவும்,
சக குடும்பத்தினரும்.

குறிப்பு: தனித்தனியே நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகின்றோம்.

[4052]

## யாழ்ப்பாண மாநகரசபை

### வழங்குநர்களைப் பதிவு செய்தல்-1993

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு யாழ்ப்பாண மாநகரசபையுடன் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பதிவுக் கட்டணத்திற்கான காசோலையை அல்லது காசுக்கட்டளையை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு எழுதி அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து 10.02.1993 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்புதல் வேண்டும். அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1993" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | பொருட்களின் விபரம் | | மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணம் |
|---|---|---|---|
| 01. | எழுது கருவிகள் | — | 100.00 |
| 02. | அச்சிட்ட படிவங்கள், பத்திரங்கள் | — | 100 00 |
| 03. | சௌக்கிய சேவைப் பொருட்கள் | — | 100 00 |
| 04. | பிரசவ விடுதிக்கு மேலைநாட்டு மருந்துகள் | — | 100 00 |
| 05. | மரப்பலகைகள் | — | 100 00 |
| 06. | தண்ணீர் மாணிகள் | — | 100.00 |
| 07. | பி. வி. சி. குழாய் பொருத்திகள் | — | 100.00 |
| 08. | ஜி ஐ குழாய்கள் பொருத்திகள் | — | 100 00 |
| 09. | இரும்புக் கம்பிகள் | — | 100 00 |
| 10. | இரும்புச் சாமான்கள் | — | 100 00 |
| 11. | பெயின்ற் வகைகள் | — | 100 00 |
| 12. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | — | 100.00 |
| 13. | மின்சாரப் பொருள்கள் | — | 100 00 |
| 14. | ஆயுர்வேத மருந்து வகைகள் | — | 100.00 |

குறிப்பிட்ட கால எல்லைக்குள் பொருள்களை வழங்கத் தவறும் அல்லது மாதிரிக்கு இணைய வழங்கத் தவறும் வழங்குநர்களின் பதிவுகள் எவ்வித அறிவித்தலுமின்றி பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19- 01- 1993

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(சி-5882)

## நினைவு கூருகின்றோம்...

**1993-1-27**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை - குச்சவெளிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 5 தமிழர்கள்,

1989 ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த

**மோகன்** [சோமசுந்தரம் விமலதாஸ் - ஓமந்தை - வவுனியா]

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - வெடிவைத்தகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய - முல்லைத்தீவு மாவட்டத் தளபதி -

**மேஜர் காந்தன்** [வீரசிங்கம் திலீப்குமார் - திரியாய்- திருக்கோணமலை]

**மதுவன்** (கனகசபை கருணாநிதி - கொக்கிளாய் - மணலாறு)

**கப்டன் ரஞ்சன்** (செல்வராசா கருணாகரன்- ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**கப்டன் புத்தா** (முருகன் சந்திரகுமார் - கொழும்பு) மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலை, களுவாங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/5879)

மாணவர் உணவு முத்திரை

# வழங்கப்படும்பொருள்களை முன்கூட்டியே அறிவிக்கவும்

[யாழ்ப்பாணம்]

மாணவ உணவு முத்திரைகளுக்குவழங்கப்படவுள்ள உணவுப்பொருள்கள் பற்றிய விபரங்களை முன்கூட்டியே அறிவிக்குமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் தனது நிர்வாகத்திற்குட்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

மாணவ உணவு முத்திரைகளுக்கு எவ்வெவ்வ உணவுப் பொருள்கள் விநியோகிக்கப் படவுள்ளன என்பதை சகல பாடசாலைகளுக்கும் முன்கூட்டியே அறிவிப்பதற்காகவே அவர் இவ்வாறு கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [22]

# வினாத்தாள் மற்றும் காகிதாதிகள், பொதிகள் நனைந்த நிலையில்

[யாழ்ப்பாணம்]

எழுதுவினைஞர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் மற்றும், காகிதாதிகள் என்பன நனைந்த நிலையில் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் இருந்து குமாரிகப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்ட இவ் வினாத்தாள்களும், காகிதாதிகளும் கடற்கொந்தளிப்பு காரணமாக கப்பலிற்குள் கடல்நீர் அடிக்கப்பட்டு உட்சென்றதால் இவை நனைந்ததாகத் தெரியவருகின்றது. பின்னர் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டது. பின்பு அங்கு இவை உலர்த்தப்பட்டது என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

# ரொனி டி. மெல்லின் சேவை நாட்டிற்குத் தேவையாம்

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி. மெல்லின் சேவை நாட்டையும், மதத்தையும் காப்பாற்றுவதற்கு அவசியம் தேவைப்படுவதாக சிறிரோகண சங்காவே அனுநாயக்க ராஜகிய பண்டித அத்துடாவே சிறிராகுல தேரோ கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டில் தற்போது நடைபெறும் சம்பவங்களை மையமாக வைத்துப் பார்க்குமிடத்து சிங்களவர்களுக்கு மதமும் நாடும் இல்லாமல் போகும் நிலைதோன்றியுள்ளதுஎனவும் குறிப்பிட்டார்.

# கடல் கொந்தளிப்பால் பொருள்கள் இறக்குவதுபாதிப்பு

பருத்தித்துறை கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் காணப்பட்ட அசாதாரண நிலையால் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் மந்த நிலையடைந்தது.

கடல் தொந்தளிப்பு ஏற்பட்டதனால் பொருள்களை ஏற்றி வந்த இழுவைப்படகு வள்ளங்கள் திசைமாறிச் செல்ல நேர்ந்தன. தொழிலாளர்கள் அதற்குரிய கயிற்றினால் இழுவைப்படகை கட்டி பெரும் கஷ்டத்தின் நிலையிலேயே கரைக்கு இழுத்து வந்தனர். (யோ)

# நோராட் அதிகாரிகள் மட்டக்களப்பு விஜயம்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் நோராட் அமைப்பினரால் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகள் குறித்து ஆராயும் முகமாக நோர்வேயில் இருந்து ஒரு பிரதிநிதிகள்குழு நாளை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளது.

மூன்று தினங்கள் வரை மட்டக்களப்பில் தங்கியிருக்கும் இக் குழுவினர் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து மேற்பார்வை செய்வதுடன், இந்த ஆண்டில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் பணிகள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

கடந்த வருடத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் நோராட் நிறுவனம் 45 மில்லியன் ரூபாவை புனர்வாழ்வு புனர் நிர்மான பணிகளுக்காக செலவிட்டிருப்பது தெரிந்ததே.

# "விடியலைத்தேடும் பறவைகள்"

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கலைஞர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய 'விடியலைத்தேடும் பறவைகள்'' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நாளை வியாழன் மாலை 2 30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் திரு. வே. சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பைச் சேர்ந்த திரு ந இன்பன் நிகழ்த்துவார். யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் க. துரைராசா இதில் பங்குபற்றிய கலைஞர்களை கௌரவிப்பார்.

சிறப்புரையை தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் மதிப்புரையை யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் இ. சண்முகதாஸ், விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, அகில இலங்கை கம்பன் கழகத் தலைவர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# மருந்துத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் இயங்கி வரும் இடம்பெயர்ந்தோருக்கான அரசாங்க மதிய மருந்தகத்தில் பனடோல் குளிகை உட்பட மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. தினமும் 250 க்கு மேற்பட்ட நோயாளர்கள் இங்கு சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர். மருந்துத் தட்டுப்பாட்டினால், இடம்பெயர்ந்து துன்பத்தில் வாழும் ஏழை நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (42)

தமிழகத்தில் குண்டுவெடிப்பின் எதிரொலி

# பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்; சோதனைசாவடிகள் அமைப்பு

(சென்னை)

தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களைத் தொடர்ந்து இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

நேற்று சென்னையில் நடைபெற்ற குடியரசு தின கொண்டாட்டங்களை ஒட்டி நகருக்கு வரும் முக்கிய வீதிகளில் பதின்மூன்று சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்ததாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை சென்னை விமானநிலையத்திலும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# தமிழக அரசின் புலிகள் குறித்த கூற்று பொய்த்துப் போய்விட்டது

## வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ் நாட்டில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் புலிகளின் நடவடிக்கைகள் தமிழ் நாட்டிலிருந்து அறவே ஒழிக்கப்பட்டுவிட்டன என்ற மாநில அரசின் கூற்றைப் பொய்யாக்கிவிட்டதாக தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறினார்

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புலிகள் ஆதரவாளர்கள் தமிழ் நாட்டில் மிகவும் ஒருங்கிணைந்த முறையில் செயற்பட்டு வருவதையும், சக்திவாய்ந்த தொடர்புக் கட்டமைப்புகள் அவர்கள் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதையும் இச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன என்று கூறினார்.

புலிகள் ஆதரவாளர்களின் நடவடிக்கையை ஒடுக்குவதில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, அ. இ. காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனார்த்தன்பூஜாரி ஆகியோர் தலையீடுசெய்யக்கோரி தமிழ் நாடு காங்கிரஸ் கட்சிக்குழு அவர்களுக்குத் தந்தி அனுப்பியிருப்பதாகவும் வாழப்பாடி கூறினார்.

விழுப்புரத்தில் மகாத்மா காந்தி சிலை குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது குறித்து தமிழ் நாடு ஜனதாக் கட்சித் தலைவர் திருமதி சந்திரலேகா விடுத்த அறிக்கையில் தமிழக அரசு விடுதலைப் புலிகள் விஷயத்தில் மெத்தனமாகவே செயல்பட்டு வருகிறது என்பதை இச்சம்பவம் நிரூபித்து விட்டதாகக் கூறியிருக்கிறார்.

# ஒற்றுமைக்கு உழைப்போம்

நடந்து முடிந்துவிட்ட பாபர் மசூதி விவகாரத்தை மறந்துவிட்டு நாட்டுஒற்றுமை மற்றும் அமைதிக்கு பாடுபடுவோம் என்று முஸ்லிம் உலாமாக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சட்டம் ஒழுங்கு பற்றி

# ஜெயலலிதா அதிகாரிகளுடன் கலந்தாலோசனை

(சென்னை)

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமைபற்றி முதல்வர் ஜெயலலிதா மாநிலஅரசு உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசனை நடத்தியுள்ளதாக தமிழ் நாட்டரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. சுமார் நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு மேல் நீடித்த இந்தச் சந்திப்பின்போது கோவில் சிலை திருடுவோர் கைது செய்யப்படவேண்டும் என்றும் கள்ளச் சாராயம் காச்சுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் முதல்வர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டார்.

# தொலை. இந்தி திணிப்பதாக தி. மு. க. ஆர்ப்பாட்டம்

தொலைக்காட்சி ஒளிபரப்புகளில் தமிழ்நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு நேரத்தைக் குறைத்து, இந்தி நிகழ்ச்சிகளை அதிகமாக்கியதாகக் கூறிதமிழ் நாட்டின் பல பகுதிகளில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தொலைக்காட்சி அலுவலகங்கள் மற்றும் அஞ்சல் நிலையங்களின் முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் திராவிடக் கழகத்தினர்நேற்று முன்தினம்ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

# தமிழகத்தில் மகளிர் காவல் நிலையம்

(சென்னை)

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் முழுவதும் பெண்களால் நடாத்தப்படும் காவல் நிலையங்களை ஏற்படுத்த தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இதற்கென பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ராஜீவ் கொலை விசாரணை பூந்த மல்லியில்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்குவிசாரணை சென்னைக்கருகே பூந்தமல்லியில் புதிதாகக் கட்டப்பட்ட நீதிமன்றக் கட்டடத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. இவ் வழக்கு அடுத்த மாதம் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கைப் புலன் விசாரணை செய்யும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் பி. ஆர். கார்த்திகேயன் சென்னையில் நேற்று செய்தியாளரிடம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

புலிகளின் கப்பல் எம். பி. அசாத் தொடர்பான விசாரணையையும் சிறப்புப்புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

கைதுசெய்யப்பட்ட ஒன்பது கப்பல் ஊழியர்களையும் சென்னைக்குக் கொண்டுவர அதிகாரிகள் விசாகப்பட்டணம் சென்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

# குண்டு வைக்க முயற்சி; 4 சீக்கியர் டில்லியில் கைது

(டில்லி)

நேற்று நடைபெற்ற இந்திய குடியரசுத் தினத்தைக் குழப்ப குண்டுவெடிப்புகளில் ஈடுபடத் திட்டமிட்டிருந்ததாக நான்கு சீக்கியப் போராளிகள் டில்லியில் கைதுசெய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இத்தகைய சம்பவங்களுக்குத் தான் பயப்படவில்லை என குடியரசுத் தினத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜர் தெரிவித்தார்.

குடியரசுத் தினத்தை முன்னிட்டு டில்லியில் வழமைக்கு மாறாகப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# இந்திய வெளியுறவு கொள்கையில் மாற்றம்

(டில்லி)

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தியா குடியரசு நாடாக மாறிய பின்னர்ஒருமுறைகூட பிரித்தானிய பிரதமர் ஒருவர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்படாதபடியால், தற்போது பிரதமர் ஜோன் மேஜர்சிறப்பு விருந்தினராகக் குடியரசுத் தினத்தில் கலந்து கொள்வது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை மாற்றத்தையே காட்டுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது,

# அதிகாரியின் சூட்டிற்கு இரு பொலிசார் பலி

(டில்லி)

மணிப்பூரில் தவறுதலாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பொலிசார் பலியானதுடன் ஒருவர் படுகாயமடைந்தார்.

மணிப்பூரில் நேற்று முன்தினம் இரவு அசாம் துப்பாக்கி அணியின் அதிகாரி ஒருவர் ஆளடையாளம் தெரியாத நிலையில் சுட்டதில் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஒரு சப் இன்ஸ்பெக்டர் படுகாயமடைந்தார்.

சந்தேகத்திற்குரிய தலைமறைவான தீவிரவாதிகள் குழுவைச் சேர்ந்த இனம் தெரியாத இளைஞர் ஒருவர் அசாம் துப்பாக்கி அணியை நோக்கி குண்டு ஒன்றை எறிந்ததாகவும் இதனைத் தொடர்ந்து குண்டு வெடித்த இடத்தை நோக்கி குறிப்பிட்ட அதிகாரி துப்பாக்கி பிரயோகம் செய்ததிலேயே மேற்படி பொலிசார் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

# G. A. Q 94 (பேராதனை)

பேராதனை பல்கலைக் கழகத்துக்கான
வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்

## விரிவுரைகள் 30-1-93
## ஆரம்பம் (காலை 9.00 மணி)

★ A/L 92 AUGUST பரீட்சை எடுத்து 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தால் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு:-

ட. அருள் நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-5884)

# 31-வது நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
5-12-1922

ஆண்டவன் அடியில்
29-12-1992

## திரு. முத்தையா ஐயாத்துரை

கலங்கரை விளக்காய் இலங்கி நின்ற தெய்வமே
காலமெல்லாம் எம்மை கலங்கவிட்டு எங்குற்றீர்
-எங்கள்
குலத்திற்கே குலவிளக்காய் திகழ்ந்து வந்த தெய்வமே
-எமது
இல்லத்தில் இல்லையென்ற குறையேயொழிய
உள்ளத்தில் என்றென்றும் உருவாய் உள்ளீர்

பிளாக் றோட் மனைவி, மக்கள், மருமக்கள்,
சங்கானை. (4149) பேரப்பிள்ளைகள்.

# விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் கல்வி ஆண்டு 1993 ற்கானமுதலாம் தவணை அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என அதன் அதிபர் அறிவித்துள்ளார்.

சகல விரிவுரையாளர்களையும் போதனாசிரியர்களையும் முதலாம் திகதியிலிருந்து சமுகமளிக்குமாறும் மாணவர்களை அடுத்தமாத 8-ம்திகதி முதல் சமுகமளிக்குமாறும் அதிபர் கேட்டுள்ளனர்.

## பௌதிகத்துறை வெற்றிடம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக பௌதிகத்துறையில் உள்ள விரிவுரையாளர் வெற்றிடங்களை உடன் நிரப்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக பௌதிகத் துறையில் நிலவிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் பல பிரச்சினைகளை யாழ் வளாகம் சந்தித்துள்ளது என்றும் ஆசிரிய விரிவுரையாளர் நிரப்பப்பட்டதும் இப்பிரச்சினைகள் உடன் நீங்கும் எனத் தெரிவித்தார். (05)

## சிறுவர்களுக்கு பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டது

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் அல்லாரை அலகு ஜே. 322 இன் மூலம் அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் 15 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்குப் பூச்சிமருந்து (VERMOX) கொடிகாமம் பிரதேசசபை, பொது சுகாதாரப் பரிசோதகரின் அனுசரணையுடன் வழங்கப்பட்டது.

அதில் 70 பிள்ளைகள் கலந்து கொண்டு பயனடைந்தனர் எனத் தலைவர் தெரிவித்துள்ளார். [24]

# கலைவர்த்தகக் கல்லூரி
# C.C.A.

வெலிங்டன் சந்திக்கருகாமை
யாழ்ப்பாணம்

## வார இறுதி வகுப்பு

1992 க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான துரித மீட்டல் வினாவிடை வகுப்பு

ஆரம்பம் :
**30-1-93 சனி, பி.ப. 1.00மணி**

வர்த்தகம் : திரு. இ. இரட்ணம்

குறிப்பு : 1992 நவம்பரில் இருந்து செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வர்த்தகம் பகல்நேர வகுப்பு நடைபெறுவதில்லை. ஆகையால் சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களில் மட்டுமே நடைபெறும்.

நிர்வாகி

(சி-5890)

# சமூகசேவை நிதிக்காக

புனித பத்திரிசியார் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மட இன்றக்ட் கழகங்கள் இணைந்து வழங்கும்,

## ★ "இன்னிசை மழை" ★

இடம்:- புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபம்


காலம்:- 30-1-93 (சனிக்கிழமை)

நேரம்:- காலை 9 மணி
மாலை 2-30 மணி

நுழைவுச் சீட்டுக்கள் மண்டப வாயிலில்)

(4145)

# 31ஆம் நாள் நினைவுக்கோலம் !



மேஜர் கோபி
(தமிழேந்தி)
கதிரவேலுப்பிள்ளை
காளியப்பு
தம்பலகமம் - திருமலை



கப்டன் விபுலன்
(தோன்றல்)
வேலாயுதம்
பரமேஸ்வரன்
கந்தளாய் - திருமலை




லெப். மண்டேலா
(பொற்கைமாறன்)
முருகையா முரளி
பன்குளம் - திருமலை

**வீரச்சாவு: 28. 12. 92**

திருக்கோண மலை மண்ணில் உருவாகினீர்!
திடமான உளத்தோடு சமராடினீர்!
செருக்கோடு தமிழீழம் தலைநிமிரவே!
சிறப்போடு பணியாற்றி எருவாகினீர்!

மாணிக்கம் உதிர்ந்தாலும் மண்மீதிலே!
மங்காது ஒளிவீசும் என் நாளுமே!
காணிக்கை யாய் வீழ்ந்த புலிவீரரே!
காலத்தால் மறவாது (உ)ம் புகழ் வாழுமே!

(சி/5870) - திருமலை மாவட்ட மக்கள்



# UNIKCO COMPUTER CENTER

★ **BASIC**
Introduction to Data Processing Programming with File handling graphics and music

★ **dBASE III+**
Commercial and Administration Programming

★ **LOTUS 1-2-3**
Accounting Statistical and graphics

★ **WORD PROCESSING**
wordstar 5·5 word perfect and Tamil word Processing

ஆரம்பம் Week end 30-1-93
Week day 1-2 93

மேலதிக விபரங்களுக்கு :
*No. 37, CLOCK TOWER ROAD,*
JAFFNA
(வெலிங்டன் சந்திக்கு வடக்குப்புறமாக மேல்மாடியில்)
(சி-5886)

**சிந்தனைக்கு**

அடக்கப்படுபவர்கள் அதற்கு பணிந்து செல்லும் போதுதான், ஆதிக்கம் வலுப்பெறுகிறது என்ற இரகசியத்தை ஒவ்வொருவரும் அறிய வேண்டும்.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் · 27-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2849 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

# பிரிக்க முடியாத இன உணர்வு

தளபதி கேணல் கிட்டுவையும், ஒன்பது விடுதலைப் புலிகளையும் இந்தியா சாகடித்தமை குறித்து தமிழகத்தில் எதிர்ப்பலைகள் கிளம்பத் தொடங்கியுள்ளன. இதன் ஒரு அம்சமாக சென்னை நகரின் பல பாகங்களிலும் தளபதி கிட்டுவிற்கும், ஏனைய போராளிகளுக்கும் அஞ்சலி தெரிவிக்கும் சுவரொட்டிகள் பெரிய அளவுகளில் ஒட்டப்பட்டன. இதேவேளை, மூன்று தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. "தளபதி கிட்டுவின் மரணத்திற்குக் காரணமானவர்களைக் கண்டித்து இத்தொடர் குண்டுகளை மூன்றிடங்களிலும் நாம் வெடிக்கச் செய்துள்ளோம்" இவ்வாறு தமிழர் விடுதலைப்படை என்னும் அமைப்பு உரிமையும் கோரியுள்ளது.

தமிழகத்தில் இரவோடு இரவாக சுவரொட்டிகள் ஒட்டப்படுவதும், குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கும் காரணம் இந்தியாவின் மத்தியிலுள்ள ஆட்சியாளர்களும், தமிழகத்தில் உள்ள ஆட்சியாளர்களுமே ஆகும். மக்களின் ஜனநாயக ரீதியான உரிமைகளை அரசாங்கம் அரச படைகளின் துணை கொண்டு அடக்க முற்படும்போதே மக்கள் இரகசிய நடவடிக்கைகளிலும், வன் முறைகளிலும் ஈடுபடுகின்றார்களே ஒழிய மக்கள் வன்முறையில் காதல் கொண்டவர்கள் அல்ல.

இன்று தமிழகத்தின் நிலையும் அதுவே. இலங்கைத் தமிழர்பால் தமிழக மக்கள் கொண்டுள்ள இனப்பற்றுதலையும், அவர்கள் படும் துன்பங்களில் பங்கு கொள்ள விளைவதையும் தமிழக அரசும், இந்திய அரசும் இராணுவ வேலி போட்டு தடுத்து விடப் பார்க்கின்றன. மக்கள் தமது உணர்வை வெளிப்படுத்துவதற்கு வரம்பு போட முற்படுகின்றன.

எடுத்துக்காட்டாக தளபதி கிட்டுவும், ஏனையோரும் சாகடிக்கப்பட்டபோது, ஜனநாயக ரீதியாக ஊர்வலம் நடத்தவும், எதிர்ப்பைக் காட்டவும் நெடுமாறன் போன்ற தலைவர்கள் முற்பட்டதை தமிழக அரசு தனது பொலிசைக் கொண்டு தடுத்தது. கைது செய்து சிறையில் அடைத்தது. இதன் விளைவு, இரவோடு இரவாக சுவரொட்டிகளை ஒட்ட வேண்டிய நிர்ப்பந்தம் மக்களுக்கு எழுந்துள்ளது. மறியல் செய்ய முடியாமையால் குண்டு வெடிப்புக்கள் நடத்தவேண்டி ஏற்பட்டுள்ளது.

ஆனால், எதிலும் அரசியல் நடத்தியே பழக்கப்பட்டுப்போன தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறுவது போன்று தமிழக அரசு விடுதலைப் புலிகளை ஒழிக்கத் தவறியதினால்தான் குண்டுவெடிப்புக்கள் இடம் பெற்றன எனக் கூறுவது பெரும் தவறாகும். தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத தவறான கணிப்பாகும். தமிழக மக்கள் மத்தியில் தமிழீழ மக்கள் மீதுள்ள பற்றும், அனுதாபமும், விடுதலைப் புலிகள் மீதுள்ள விருப்பும் நம்பிக்கையுமே இவற்றிற்குக் காரணமாகும்.

தமிழக அரசியல்வாதிகளும் சரி இந்தியாவின் மத்தியில் உள்ள அரசியல்வாதிகளும் சரி தமது அரசியல் லாபத்திற்கும், அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியிலும் நேரத்திற்கு ஒன்று பேசலாம். வார்த்தை மாறலாம். துரோகம் புரியலாம். இன உணர்வு இல்லாது போகலாம்.

ஆனால், மக்கள் அவ்வாறில்லை. அவர்கள் இன உணர்வு மிக்கவர்கள். தமது இனத்திற்காக எதையும் தியாகம் செய்யத் தயாரானவர்கள். அவர்களை ஒரு எல்லைவரையுமே அரசியல்வாதிகள் ஏமாற்ற முடியும். எல்லை மீறும்போது விளைவுகள் பயங்கரமாக மாறிவிடும். இதனையே தமிழகத்தின் இன்றைய நிலையும் உணர்த்துவதாகவுள்ளது.

# அடிப்படை மருத்துவ வசதியின்றி மன்னார் மக்கள் பெரும் அவதி

(பூநகரி)

மன்னார் மாவட்டத்தில் வைத்திய வசதி குறைவால் அங்குள்ள மக்கள் பெரும் இன்னல்களுக் குட்படுவதோடு பல சுகாதாரப் பிரச்சினைகளையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும்எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அகதி முகாம்கள் சில தொண்டர் நிறுவனங்களால் கவனிக்கப்பட்டு வருகிறது என்று அரசு கூறியபோதிலும் அங்குள்ள அகதிமுகாம்களில் மக்கள் சுகாதார வசதியின்றி அவலக் குரல் எழுப்பி வருகிறார்கள். குறிப்பாக மலேரியா தீவிரமாகப் பரவி வருகின்றபோதும் வைத்தியசாலை இல்லாது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த நோயில் இருந்து மீள முடியாமல் சிலருக்கு கண்கள் மஞ்சளாகி செங்கண்மாரி ஏற்பட்டு வருவதாகவும் அறிய முடிகிறது.

இதேவேளை மடு அகதி முகாமில் உள்ள மக்களும் சுகாதார வசதியின்றிப் பெரிதும் இன்னல்படுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான நேரத்தில் தேவையான பொருள்கள் வழங்கப்படுவதில்லை. சுகாதாரச் சீர்கேடுகளால் நோய்கள் பரவி வரும் ஆபத்தான நிலையேற்பட்டுள்ளது. இப்படியாக குறை உயிருடனுள்ள சில மக்களை வைத்துக் கொண்டு நிறுவனங்கள் மூலமாக தாம் அகதி முகாம் நடாத்தி வருவதாக உலக நாடுகளையும், பொது நிறுவனங்களையும் அரசாங்கம் ஏமாற்றி வருகிறது.

மன்னார் மாவட்டத்தில் போக்குவரத்து சீரின்மையால் கிராமப் புற மக்கள் நகரப்புற வைத்தியசாலைகளுக்குச் செல்ல முடியாத அவலநிலையும் காணப்படுகிறது. இதே நேரம் வீதிகள் எங்கும் மேடு பள்ளமாக இருப்பதால் அவசர நோயாளிகளைச் சிகிச்சைக்கு கொண்டு செல்ல முடியாத சோகமான நிலையும் இங்கு காணப்படுகிறது.

# அமைச்சு செயலர் நியமனம் அரசியல் நியமனங்களே

## - அமைச்சர் நந்தா மத்தியூஸ்

[கொழும்பு]

அமைச்சு செயலாளர்களின் நியமனம் 'அரசியல் நியமனம்' என்று இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூஸ் பாராளுமன்றத்தில் வெளியிட்டுள்ள கருத்தை அடுத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் பலர் கவலைதெரிவித்துள்ளனர்.

அமைச்சின் செயலாளர்கள் சிறிலங்கா நிர்வாக சேவையில் சித்தியடைந்தவர்கள் என்றும், தகைமை மற்றும்திறமை அடிப்படையிலேயே தமக்கு ஜனாதிபதியினால் நியமனம் வழங்கப்பட்டதாகவும் அமைச்சின் செயலாளர் ஒருவர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

பாராளுமன்றத்தில் பதில் சொல்ல முடியாதவர்களைப் பற்றிப் பாராளுமன்றத்தில் விமர்சிப்பது முறையீனமான செயலென்றும் செயலாளர்கள் தரப்பில்தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. குணரெட்ணாவுக்கும் அமைச்சர் நந்தா மத்தியூசுக்கும் இடையில் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட விவாதத்தின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## தியத்தலாவை பயிற்சி முகாமில்

# கைக்குண்டு வெடித்ததில் சிப்பாய்பலி; மூவர் காயம்

(பதுளை)

தியத்தலாவை இராணுவ பயிற்சி முகாமில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில்இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானதுடன் மூவர்படுகாயமடைந்தனர்.

அண்மையில்பதுளை மாவட்டம் தியத்தலாவை சிறிலங்கா இராணுவ பயிற்சி முகாமில் கைக்குண்டு தொடர்பான பயிற்சி ஒன்று வழங்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை தவறுதலாகஒரு கைக்குண்டு வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின்போது ஒரு சிப்பாய்பலியானதுடன் மூவர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த மூவரும் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# அதிபர் தரம் II நியமனம் பெற்றோர்

1991-ல் நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை IIற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள பின்வருவோர் 01. 06 91 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை II-ல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

### யாழ்.கல்விக்கோட்டம்

திரு. ரி. எஸ். சண்முகராசா யா/இந்துக்கல்லூரி, எம்.பாலசிங்கம் யா/திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திரு. எல். ஓங்காரமூர்த்தி யா/மத்திய கல்லூரி, திரு. ஜீ. எவ். லூயிஸ் யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், திரு. ரி. கிருஷ்ணகுமார் கொக்குவில் இந்துக் கல்லூரி, திரு. சி. சிவசுப்பிரமணியம் கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்.

### வேலணைக் கல்விக் கோட்டம்

திரு. பி. அருணகிரிநாதன் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், திருமதி .வி எம். சிவபாலன் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம், திரு. ஆர். இரகுபதி வேலணை சேர்வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம்.

### மருதனார்மடம் கல்விக்கோட்டம்

திரு. என். சிவகடாட்சம் கோட்டக்கல்வி அலுவலகம் மருதனாமடம், திரு. எஸ். சிவனேஸ்வரன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, திரு. ஆர். குணானந்தன் அச்சுவேலி சைவப்பிரகாச வித்தியாலயம், திரு. ரி. எங்கரசு புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயம், திருமதி வி. பசுபதிப்பிள்ளை மானிப்பாய் மகளிர் வித்தியாலயம், திருமதி எல். இரகுபதி ஏழாலை சிறி முருக வித்தியாலயம், திரு. வி இராதாகிருஷ்ணன் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், செல்வி வி. பேரம்பலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருமதி வி. முத்துக்குமாரசாமி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, திருமதி எல். மகேந்திரன் உரும்பராய் சைவத் தமிழ் மகாவித்தியாலயம்.

### வடமராட்சிக் கல்விக் கோட்டம்

திரு. எம். ஆனந்தேஸ்வரன் உடுப்பிட்டி அ. மி. த. க. வித்தியாலயம், செல்வி ஏ. கனகரத்தினம் வேலாயுதம் மகாவித்தியாலயம் பருத்தித்துறை, திரு. எஸ். மகேந்திரன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், திரு. எஸ். வரதராசசர்மா கரணவாய் மகாவித்தியாலயம், திரு. வி. சிவசிதம்பரம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, திரு. அ. விஜயானந்தன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், திருமதி ஆர். நந்தகுமார், பரு/மெதடிஸ்த மகளிர் கல்லூரி, திரு. வி. பூபாலசுந்தரம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

### சாவகச்சேரி கல்விக் கோட்டம்

திரு. அ. அகிலதாஸ் மிருசுவில் உசன் இராமநாதன் பாடசாலை, திரு. அ. சோதிலிங்கம் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், திரு. எஸ். ஆர். மகேந்திரன் உசன் இராமநாதன் வித்தியாலயம் மிருசுவில், திருமதி வி. குலசேகரம் சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம், திருமதி ரி. ஜெயக்குமாரன் சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம், திரு. வி. பாலசுப்பிரமணியம் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்.

### பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம்

திரு. என். நடராஜமணி, காங்கேசன்துறை நடேஸ்வரா வித்தியாலம்.

## வடக்கே டீசல் கொண்டுவர

# லஞ்சம் வழங்கியதாக 9 லொறிச் சாரதிகள் கைது

(வவுனியா)

வடபகுதிக்குள் டீசல் எடுத்துச் செல்வதற்காக லஞ்சம் கொடுக்கமுயன்றதாக ஒன்பது லொறிச் சாரதிகளை சிறிலங்கா இராணுவத்தினர்கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவு டீசலை வடபகுதிக்குள் எடுத்துச் செல்வதற்காக வவுனியாவில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் அனுமதியைக்கோரியிருந்த யாழ் லொறிச்சாரதிகள் சிலர் அனுமதிக்காக இராணுவ அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்டனராம். இவ்வாறு லஞ்சம் கொடுக்க முற்பட்ட ஒன்பது சாரதிகளையும் இராணுவத்தினர் கைதுசெய்து அவர்களையும், லொறிகளையும் பொலிசாரிடம்ஒப்படைத்துள்ளனராம்.

# அதிபர் தரம் I நியமனம் பெற்றோர்

1991 ஆம் ஆண்டு நடை பெற்ற இலங்கை பாடசாலை அதிபர் தரம் (I) இல் சித்திய டைந்துள்ள பின்வரும் பெயர் களையுடையோர் 01 - 06 - 91 இல் இருந்து அதிபர் தரம் (I) இல் நியமனம் செய்யப்பட்டுள் ளார்கள்.

### சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகப் பாடசாலைகள்

திரு. பி. முத்துலிங்கம் முத் துக்குமாரசாமி மகாவித்தியா லயம், கைதடி, திரு. I. வரத ராசா எழுதுமட்டுவாள் கணே சாவித்தியாலயம், திரு. எம். பாலசுப்பிரமணியம் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், செல்வி கே. வீரசிங்கம் சாவ கச்சேரி மகளிர் மகாவித்தியா லயம், திரு. என் சிவசோதி கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்.

### யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம்

திரு ரி சந்தோசம் யா/ வைத்தீஸ்வர வித்தியாலயம், திரு. வி. மாணிக்கம் யா / நல் லூர் காசிப்பிள்ளை வித்தியா லயம், திருமதி ரி செல்வதி துரை யா / வைத்தீஸ்வரா வித் தியாலயம்.

### மருதனார்மடம் கல்விக் கோட்டம்

திருமதி பி. கந்தசாமி மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருமதி எஸ் சிவலிங்கம் ஆனைக்கோட்டை றோ.க.த. மகா வித்தியாலயம், திருமதி எஸ். ஜெயவீரசிங்கம் மானிப் பாய் இந்துக்கல்லூரி.

### வேலணைக் கல்விக் கோட்டம்

திரு. என். தர்மபாலன் புங் குடுதீவு மகா வித்தியாலயம், திரு. கே. பேரின்ப நாயகம் மண்டைதீவு மகாவித்தியால யம், திருமதி அ சண்முக நாதன் அல்லைப்பிட்டி பரா சக்தி வித்தியாலயம்.

### பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம்

திரு. பி கமலநாதன் தெல் லிப்பழை யூனியன் கல்லூரி, திரு. என் பரமசிவம் வியாவில் சைவத்தமிழ் மகாவித்தியால யம் காரைநகர் திரு. அ சிறிக் குமாரன் இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி. திரு. பி. பெனடிக்ற் மாரீசன்கூடல் றோ க. த. க. மகாவித்தியா லயம் இளவாலை.

### வடமராட்சி கல்விக் கோட்டம்

திரு. கே. அம்பலவாணர் கரவெட்டி விக்னேஸ்வரா வித் தியாலயம், திரு. ஆர். ஞான சேகரம்பிள்ளை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், திரு. எஸ். சித்திரவடிவேல் வல்வை சிதம்பரா வித்தியால யம்.

# நியமனம் கிடைக்காதோர் பதிவு செய்துகொள்ளவும்

1991-10-18-ம் திகதி வர்த் தமானி அறிவித்தலுக்கமைய, 1992-01-20-ம் திகதிக்கு முன் னர் அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழக மொன்றில் பட் டம் பெற்று, பட்டதாரிப் பயிலுனர் நியமனத்துக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இதுவரை நியமனம் கிடைக்காதவர்க ளும், தங்கள் பெயரை இத் திணைக்களத்தில் வந்து பதிவு செய்து கொள்ளாதவர்களும் உடனடியாக இத்திணைக் களத்தில் வந்து தங்கள் பெயர் களைப் பதிவு செய்துகொள் மாறு யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## விசேட கூட்டம்

யாழ். மாவட்ட விளை யாட்டு அபிவிருத்திக் குழுவின் விசேட கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 30 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. சகல உறுப்பினர்களும் இதில் தவ றாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ற னர்.

## நன்றி கூறுகின்றேன்

எனது வீட்டில்வைத்து 9- 10- 92 அன்று இரவு வேளை களவாடப்பட்ட புதிய சைக்கிளை மீட்டுத் தந்த தமிழீழக் காவல்துறை, மாவட்டக் குற்றப் புலனாய் வுப் பிரிவினருக்கு [பழையபூங்கா] நன்றி கூறுகின்றேன்

இ. இரகுநாதன்
ஆசிரியர்,
சென்ஜோன்ஸ் கல்லூரி

(சி-4159)

‘சாளரம்’ நடாத்தும்

## கருத்துரையும், கலந்துரையாடலும்

**‘சிறுகதை எழுதல்’** பற்றி ஆர்வ முள்ள மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் பிரபல சிறுகதை எழுத்தாளர் ஒருவர் கருத்துரை வழங்கவுள் ளார்.

சாளரம் வாசகர்களான மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொள் ளும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இடம்:- புனித சார்ள்ஸ் ம. வி.
திகதி:- 29 - 01 - 1993
நேரம்:- மாலை 3.30 மணி

(சி-5883)

இப்பபத்திரிகை யாழ்ப்பாணம் மங்கயற்கரசி வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இந்திய குடியரசு தினத்தில்

# காஷ்மீர் தலைநகர் மீது ராக்கெட் தாக்குதல்

## துக்கதினமாக மக்கள் அனுஷ்டிப்பு

(டில்லி)

இந்தியக் குடியரசு தினமான நேற்றைய தினம் இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தின் பல பகுதிகளிலும் இந்தியத் தேசி யக் கொடி தீமூட்டி எரிக்கப் பட்டது.

மேலும் சில இடங்களில் இந்திய அரசியல் சாசனமும் தீமூட்டி எரிக்கப்பட்டது.

அத்துடன் குடியரசு தின அணிவகுப்பு நடைபெற்ற மைதானத்தில் இரண்டு ரொக்கட் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. எனினும் எவருக் கும் காயம் ஏற்படவில்லை. சிறிநகர்ப்பகுதியில் தொடர்ச் சியாக துப்பாக்கி வேட்டொலி கள் கேட்டவண்ணமிருந்தது. பாதுகாப்புப் படையினரும் தாக்கப்பட்டனர். இதில் ஒரு பரா இராணுவ வீரரும் இரு தீவிரவாதிகளும் இறந்தனர்.

இதேவேளை காஷ்மீரில் நேற்று துக்கதினம் அனுஷ்டிக் கப்பட்டது வீடுகள், வீதிகள், பொது நிறுவனங்கள் தோறும் கறுப்புக் கொடிகள் கட்டப் பட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வெட்டுப்புள்ளிக்கு

வல்கள் தெரிவிக்கின்றன. இந்த மாணவனுடன் சமரசம் செய்யும் நோக்குடனேயே தீர்ப்புக் கூறுவது ஒத்திவைக் கப்பட்டுள்ளதாகவும் கூறப்படு கிறது. மேற்படி விடயத்தில் அரசியல் சக்திகளின் தலையீ டும் சில அரசியல் இலக்குகளும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது எனினும் இவற்றையெல்லாம் அப்பாற் பட்டு நீதியான தீர்ப்பு ஒன்று வழங்கப்படவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் மட்டத்தில் எதிர்பார்க்கப்படு கின்றது

இவ்வழக்குத் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாணவனுடன் அரசு சமரசம் செய்து கொள் ளப்படும் பட்சத்தில் பல மாணவர்கள் பாதிக்கப்படு வர். எனவே மீண்டும் ஒரு மாணவன் மேற்படி விடயம் தொடர்பாக மற்றுமொரு வழக்கைத் தாக்கல் செய்து கொள்ள வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது.

அதேவேளை இவ் வழக் கைத் தாக்கல் செய்த மாண வனைத் திருப்திப்படுத்தி சம் மந்தப்பட்ட பிரச்சினைக்கு சமரசத்தீர்வு காண்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீவிரமாக முயற் சித்து வருகிறது. இதன் அடு த்த கட்டமாக வழக்குத்தாக் கல் செய்த மாணவனின் பெற்றோரை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தி சமரசம் செய்வதற்கு பல்க லைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் தீவிர முயற்சி எடுத்துவருவ தாகவும் அறியமுடிகிறது

மேலும் ஏற்கனவே அறிவிக் கப்பட்ட வெட்டுப் புள்ளித் திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டால் பல புதிய மாண வர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் சந்தர்ப் பம உருவாகும். ஆனால் ஏற் கனவே அனுமதிகள் வழங்கப் பட்டுவிட்டதால் சில பீடங் களில் அனுமதிக்கான வெற் றிடங்கள் தற்பொழுது இல்லை. இதனால் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள பல்கலைக்கழகங் கள் தயாராக இல்லை.

அத்துடன் மேற்படி வெட் டுப் புள்ளியில் மாற்றம் ஏற்ப டும் பட்சத்தில் பல மாணவர் கள் பல்கலைக்கழக அனுமதிக் கான தகுதியை இழக்கவேண் டிய நிலையும் உருவாகும் என் பதும் குறிப்பிடத்தக்கது. இது அரசாங்கத்தை பெரும் நெருக் கடிக்குள் தள்ளும் எனத் தெரி விக்கப்படுகின்றது. [ம]

### சொந்த

மாவட்டங்களில் கடமையாற் றிய 22 ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும் பியுள்ளனர்.

இவ்வாறு இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர் கள் தாம் கடமையாற் றவுள்ள மாவட்ட கல்வித் திணைக்களங்களில் நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள் ளலாம் என யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [நி]

### திருமலை

ஐவர் பெண்கள் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

50 பேர் செல்லக்கூடிய இப் படகில் 100க்கும் மேற்பட் டோர் ஏற்றப்பட்டதே படகு விபத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்துக்களிடமிருந்து காக்க உங்களை தயாராக்குங்கள்

## டில்லி இமாம் கோரிக்கை

குடியரசு தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டிக்க அழை ப்பு விடுத்திருந்த புதுடில்லி ஜும்மா பள்ளிவாசல் பிரதம மதகுரு புஹாரி நேற்று பகுதி ஒலிபெருக்கி மூலம் இந்திய அரசை வன்மையாகக் கண்டித் தார்

இந்துக்களிடமிருந்து உங்க ளையும், உங்கள் உடைமை களையும் உங்கள் சகோதரி களையும் காக்கத் தயாராக இருங்கள் என்றும், இந்திய அரசியல் சட்டம் செயல்பாடு இழந்து விட்டது என்றும் பிர தம மதகுரு புஹாரி ஆவேச மாகப் பேசினார்.

தொடர்ந்து சுமார் 5000 முஸ்லிம்கள் பிரதமர் பி. வி. நரசிம்மராவை கொலைகா ரர், அமைச்சர் சவான் கொலைகாரர் என்று கோஷம் எழுப்பினர். பொலி சாரின் கட்டுப் பாட்டையும் மீறி ஆர்ப்பாட்டம் நடத்தி னார்கள்.

# கலை நிகழ்ச்சி கால மாற்றம்

இன்று சென்பற்றிக்ஸ் கல் லூரி மைதானத்தில் நடை பெற இருந்த சாந்தன் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி யும், ‘உணர்வுடன் எழுவோம்’ என்ற நாடகமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 7. 00 மணிக்கு குருநகர் சென் றோக் விளையாட்டு மைதா னத்தில் (சென்பற்றிக்ஸ் கல் லூரிக்கு அருகாமையில்) நடை பெறும் என கலை பண்பாட்டு கழக யாழ். மாவட்ட பொறுப் பாளர் சி. சிட்டு அறிவித்துள் ளார்.

இதேவேளை கலை நிகழ்வு கள் நாளை வியாழக்கிழமை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

### ஏழாலையில்

தாக்குதலினால் மூன்று அப் பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று இரவு 9.00 மணியள வில் இத்தாக்குதல் நடாத்தப் பட்டது.

ஏழாலையைச் சேர்ந்த நல் லையா (வயது 50), இவரது மனைவி கண்மலர் (வயது 48), கந்தசாமி (வயது 47) ஆகிய மூவரும் இத்தாக்குதலினால் படுகாயமடைந்துள்ளனர்.

# மரண அறிவித்தல்

## பொன்னையா செல்லையா

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும், கொக்கு வில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லையா 24-1-93 அன்று சிவபதம் அடைந்துவிட்டார். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், துதிமதிதேவி (பிரான்ஸ்), தவானந்தன் (பிரான்ஸ்), மகாதேவன் (வியாபா ரம் திருநெல்வேலி சந்தை), பதிமநாதன் (முகாமையாளர் விசுவமடு ப. நோ கூ. சங்கம்), குணபாலன் (பிரான்ஸ்), கமலேஸ்வரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தந்தை யும், பாக்கியநாதன் (பிரான்ஸ்), இராஜகுணம், மகாலட் சுமி, மலர்மகள் (ஆசிரியை கிளி/தருமபுரம் மகாவித்தியா லயம்), சுதாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனா ரும், வசந்தினி (பிரான்ஸ்), நிசாந்தினி, பிரபாலினி, தமி ழினி சுபலிகா, பிறேந்தன், சுஜித்தா, சுவர்ணா ஆகி யோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 27-01-93 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயா னத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.
செ. மகாதேவன் (மகான்) (மகன்)
(4154)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 26- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8151

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-4501, 42-9345, 26-2737, 41-9487, 27-7756, 28-3233, 26-2668, 27-9489, 24-4701, 24-5457, 42-6119, 26-407, 28-3735, 24-9489, 24-8484, 40-7299, 27-0991, 26-2317, 24-9546, 26-8565,

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

22-3938, 24-8714, 24-4367, 26-1785, 27-7653, 26-6398, 41-5665, 26-4376, 27-849, 42-2862,